


32ஆவது ஆண்டில்
# விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com




நிதி: 32 | பாலம்: 15 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | AUGUST 01, 2022

# இலங்கையில் இடைக்கால அதிபர் பதவியேற்பு

இலங்கை அதிபர் கோத்தபாய ராஜபக்சவிற்கு எதிரான போராட்டங்கள் 2022 யூலை 9இல் உச்சக்கட்டத்தை அடைந்ததை அடுத்து அதிபர் யூலை 13இல் நாட்டைவிட்டு வெளியேறினார். அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கா பதில் அதிபராக (acting president) பதவியேற்றார். பின்னர் கோத்தபாய ராஜபக்ச சிங்கப்பூரில் இருந்து இலங்கை நாடாளுமன்ற சபாநாயகருக்கு யூலை 14இல் தனது அதிபர் பதவி துறப்புக் கடிதத்தை அனுப்பினார். அதைத் தொடர்ந்து நாடாளுமன்ற சபாநாயகர் மஹிந்த யாப்பா அபயவர்த்தனா யூலை 15இல் இலங்கை அதிபர் பதவி துறந்ததை உறுதி செய்தார். அதைத் தொடர்ந்து நாடாளுமன்ற சபாநாயகர் தலைமையில் யூலை 19ஆம் திகதி 225 நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் இருந்து இலங்கை இடைக்கால அதிபர் (Interim President) பதவிக்கான நியமனப் பத்திரம் கோரப்பட்டது. ரணில் விக்கிரமசிங்கா, டளஸ் அழகப்பெரும மற்றும் அனுரகுமார திஸாநாயக்க ஆகிய மூவரும் அதிபர் பதவிக்குப் போட்டியிடுவதற்கான நியமனப் பத்திரங்களைத் தாக்கல் செய்தனர்.

ரணில் விக்கிரமசிங்கா - இவர் இலங்கையில் ஆறுமுறை பிரதம மந்திரியாக இருந்தவர். யூலை 13இல் இலங்கை அதிபர் நாட்டை விட்டு வெளியேறியதில் இருந்து பதில் அதிபராகப் பதவி வகித்து வரும் இவர், ஐக்கிய தேசியக் கட்சியை (UNP) நாடாளுமன்றத்தில் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரே ஒரு நாடாளுமன்ற உறுப்பினர் ஆவார். ஆனால் இவருக்கு ஆளும் கட்சியான சிறீலங்கா பொதுஜன பெரமுன (SLPP)இன் ஆதரவு இருந்து வருகிறது.

டளஸ் அழகப்பெரும - இவர் ஒரு முன்னாள் ஊடகவியலாளர். இவர் ஆளும் கட்சியான SLPP நாடாளுமன்ற உறுப்பினர். இவருக்கு இலங்கை அரசியலில் உயர்பதவி வகித்து அனுபவம் இல்லை.

அனுரகுமார திஸாநாயக்க - இவர் இடதுசாரிக் கட்சியான ஜனதா விமுக்தி பெரமுன (JVP)இன் தலைவர். இவரது கட்சிக் கூட்டணியான (JJB)இற்கு மூன்று நாடாளுமன்ற உறுப்பினர் இருக்கின்றனர்.



யூலை 20ஆம் திகதி இந்த மூன்று வேட்பாளர்களிலும் இருந்து இலங்கை அதிபரைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெற்றது. இதுவரை காலமும் நடைபெற்ற எட்டு இலங்கை அதிபருக்கான தேர்தலிலும் பொதுமக்கள் வாக்களித்துப் பெரும்பான்மை மக்களின் ஆதரவைப் பெற்றவரே இலங்கை அதிபராகத் தெரிவு செய்யப்பட்டார். இம்முறைதான் நாடாளுமன்ற உறுப்பினர் எல்லோரும் (225 பேர்) வாக்களித்து இலங்கை அதிபரைத் தெரிவு செய்தனர். இந்த அதிபருக்கான தேர்தலில் நாடாளுமன்ற சபாநாயகரும் வாக்களிக்க வேண்டும். பெரும்பாலும் நாடாளுமன்ற சபாநாயகர் வாக்களிப்புகளில் கலந்துக்கொள்வது இல்லை. இத்தேர்தல் இதற்கு விதிவிலக்காகும்.

முன்னர் இலங்கை அதிபர் ரணசிங்க பிரேமதாசா கொல்லப்பட்டபோது இலங்கை நாடாளுமன்றம் D.B. விஜயதுங்காவை ஏகமனதாக இடைக்கால அதிபராக அதிபரின் பதவிக்காலம் முடியும்வரை தெரிவு செய்திருந்தது.

இத்தெரிதல் இரகசிய வாக்கெடுப்பு முறையில் நடைபெறுவதால் யார் யாருக்கு வாக்களித்தனர் என்ற விபரம் பொது மக்களுக்குத் தெரியவராது.

யூலை 20ஆம் திகதி நடந்த வாக்கெடுப்பின் முடிவுகள்.

52 மேலதிக வாக்குகளைப் பெற்று ரணில் விக்கிரமசிங்கா இலங்கையின் இடைக்கால அதிபராகத் தெரிவு செய்யப்பட்டார். இவர் 2019 நொவம்பரில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட அதிபரின் பதவிக்காலம் முடியும்வரை அதாவது 2024 நொவம்பர் வரை இடைக்கால அதிபராகப் பதவி வகிக்கலாம்.


இலங்கை வாழ் 22 மில்லியன் மக்களின் உடனடித் தேவையை தீர்ப்பதற்கு அடுத்த ஆறு மாதங்களுக்குள் ஐந்து பில்லியன் டொலர் தேவை. இதை இடைக்கால அதிபராகத் தெரிவு செய்யப்பட்ட ரணில் விக்கிரமசிங்கா எவ்வாறு நிறைவேற்றுவார் எனப் பல வெளிநாட்டு ஊடகவியலாளர் கேள்வி எழுப்புகின்றனர்.

73 வயது ரணில் விக்கிரமசிங்கா 2022 யூலை 21இல் இலங்கை நாடாளுமன்றத்தில் பிரதம நீதி அரசர் ஜெயந்தா ஜெயசூரியாவின் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து இலங்கையின் இடைக்கால அதிபராகப் பதவி ஏற்றார்.

ரணில் விக்கிரமசிங்கா 73 வயது தினேஷ் குணவர்த்தனாவை பிரதம மந்திரியாக நியமித்தார். இவர் இடதுசாரிக் கட்சியான மகாஜன எக்சத் பெரமுன (MEP) வினுடைய தலைவர் ஆவார். இவர் கடந்த தேர்தலில் SLPPஉடன் சேர்ந்து கூட்டணியில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்குத் தெரிவானார். தினேஷ் குணவர்த்தனா அதிபர் முன்னிலையில் பிரதமர் அலுவலகத்தில் யூலை 22ஆம் திகதி சத்தியப் பிரமாணம் செய்து பதவி ஏற்றார்.

ரணில் விக்கிரமசிங்கா தனது நண்பரும் தன்னுடன் கொழும்பு றோயல் கல்லூரியில் படித்தவருமான தினேஷ் குணவர்த்தனாவை பிரதம மந்திரியாகத் தெரிவு செய்ததை வெளிநாட்டு ஆங்கில ஊடகங்கள் வரவேற்றுள்ளன. இருவரும் ஒருவருடைய குறையை மற்றவர் பூர்த்தி

(தொடர்ச்சி 09ஆம் பக்கம்...)

























SRI LANKA CALLING
MaRadha
HOTEL
Colombo | Sri Lanka
sales@maradha.lk | +94112550136


WORK WITH THE BEST TEAM
GET YOUR HOME SOLD!
#1 HOMELIFE TEAM IN ONTARIO
SIVA & JOY
KNOWLEDGE • EXPERIENCE • SUCCESS
irealtorteam.com
futuregtahomes.com
SIVA
SHANMUGANATHAN
Broker
JOY
SELVANAYAGAM
Broker
SASIKUMAR
SHANMUGANATHAN
Broker
416.545.7482
416.709.5000
HOMELIFE
HomeLife/Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated
Bus: 905.201.9977



Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# முற்போக்கான இளையோர் சமூகம் ஒன்றிணைய வேண்டும்




தென்னிலங்கையில் இளைஞர்கள் நடத்திய ஜனநாயக வழிமுறையிலான போராட்டம் இலங்கையின் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஒருவரை நாட்டை விட்டு அகற்றியிருக்கின்றது. இந்தப் போராட்டத்தில் தமிழ் மக்களின் வகிபாகம் என்னவென்று பார்த்தால் அவர்கள் வெறும் பார்வையாளர்களாகவே இருத்திருக்கின்றனர் என்றுதான் கூற வேண்டும்.



காலிமுகத்திடலில் மாதக் கணக்கில் மேற்கொள்ளப்பட்ட போராட்டத்தில் தமிழர் தாயத்திலிருந்து இளைஞர்கள் சென்று கலந்துகொண்டிருக்க வேண்டும் என்று இங்கு கூற வரவில்லை. அங்கு போராட்டம் நடைபெற்ற காலங்களில் அப்போராட்டத்திற்கு ஆதரவளிக்கும் வகையில் தமிழ் பிரதேசங்களில் உள்ள பொதுமக்கள் போராட்டங்களை முன்னெடுத்திருக்கலாம். ஒரு சிலர் அவ்வாறு சில போராட்டங்களை முன்னெடுத்திருந்தாலும் கூட அவை பெரிதாகக் கவனத்தை ஈர்க்கும் விதமாக அமையவில்லை. தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகளும் அதனை ஊக்குவிக்கவில்லை.

போரை முடிவிற்குக் கொண்டு வந்தவர் கோட்டாபய ராஜபக்ஸ. அதற்காகவே 69 இலட்சம் சிங்கள மக்கள் அவருக்கு வாக்களித்து ஜனாதிபதியாக்கினர். அதே சிங்கள மக்கள் அவரை முற்றாக வெறுக்கும் நிலை ஏற்பட்டது. நாட்டில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியும் அதனால் மக்களுக்கு ஏற்பட்ட துன்பமும் தாங்கள் ஜனாதிபதியாக தெரிவு செய்த மனிதராலேயே தோற்றுவிக்கப்பட்டது என்பதை உணர்ந்த பின் மக்கள் அவரை தூக்கியெறிந்தனர்.

போரை முடிவிற்குக் கொண்டு வந்ததென்பது, தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தைப் படுகொலை நடவடிக்கைகளின் மூலம் துடைத்தழித்தது என்பது தான் உண்மை. அதனால்தான் இறுதிக் கட்டப் போரில் நடைபெற்ற போர்க் குற்றம், மனித உரிமை மீறல்கள் தொடர்பில் இலங்கை அரசாங்கம் பொறுப்புக் கூறவேண்டும் என சர்வதேச நாடுகள் இலங்கையை வலியுறுத்தி வருகின்றன.

இறுதிக்கட்டப் போரில் மேற்கொள்ளப்பட்ட போர்க்குற்றம், மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்புக் கூற வேண்டியோர் ராஜபக்ஸவினரே. ராஜபக்ஸ அரசாங்கத்தில்தான் தமிழர் போராட்டம் மூர்க்கத்தனமாக முடித்து வைக்கப்பட்டது. அந்தப் போரை வழிநடத்தியவர் அப்போது பாதுகாப்பு செயலாளராகவிருந்த கோட்டாபய ராஜபக்ஸவே என்பது அனைவருக்கும் தெரியும்.

அவர் நாட்டின் ஜனாதிபதியாக வந்ததன் பின்னர் போர்க் குற்றங்களுக்குப் பொறுப்புக்கூறும் முழுக் கடமையும் அவரிடமே இருந்துவந்தது. ஆனால், அதனை மறுதலிக்கும் வகையிலேயே கோட்டாபய ராஜபக்ஸ நடந்துகொண்டார். ஐ.நா மனித உரிமைகள் பேரவை மற்றும், சர்வதேச நாடுகளின் கருத்துக்களை அவர் புறக்கணித்து வந்தார்.

காணாமலாக்கப்பட்டவர்களின் உறவினர் வருடக் கணக்கில் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றனர். அதற்கு முன்னைய அரசாங்கங்களும் பொறுப்புக் கூறவில்லை. கோட்டாபய அரசாங்கமும் பொறுப்புக் கூறவில்லை. கோட்டாபய அரசாங்கம் காணாமலாக்கப்பட்டவர்களின் போராட்டங்களை கணக்கிலேயே எடுக்கவில்லை.

வருடக் கணக்கில் சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகளை முழுவதுமாக விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. வடக்கு கிழக்கில் படையினரின் ஆக்கிரமிப்பில் உள்ள தமிழ் மக்களின் காணிகள் முழுவதுமாக விடுவிக்கப்படவில்லை. இவற்றையெல்லாம் முன்வைத்து ‘கோட்டா கோ கம’ போராட்டத்தில் தமிழ் மக்களும் இணைந்து கொண்டிருக்கலாம். தமிழ் தேசிய அரசியல்வாதிகள், முற்போக்கான இளைஞர் அமைப்புக்கள் இதற்கான விழிப்புணர்வை மக்கள் மத்தியில் ஏற்படுத்தி போராட்டத்தை வழிநடத்தியிருக்கலாம்.

காலிமுகத்திலுக்குச் சென்று போராட்டத்தில் கலந்து கொள்ள வேண்டிய அவசியமில்லை. பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் தாங்கள் வாழும் அந்தந்த பிரதேசங்களிலேயே இந்தப் போராட்டத்தை நடத்தியிருக்கலாம். அது தெற்கில் போராடும் இளைஞர்களுக்கும், சர்வதேசத்திற்கும் ஒரு கவனயீர்ப்பாக அமைந்திருக்கும்.

தமிழ் தேசியக் கட்சிகளில் பிரதான பங்கை வகிக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு நாட்டில் இடம்பெற்ற போராட்டச் சூழலை தமிழ் பிரதேசங்களுக்கும் நகர்த்தியிருக்க வேண்டும். அவர்களும் அதனை செய்யவில்லை.

அண்மைக் காலத்தில் நாட்டில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் தொடர்பில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், கட்சியின் பேச்சாளருமான எம்.ஏ. சுமந்திரன் கருத்துகளை வெளியிட்டு வந்தார். அவரின் கருத்துகள் விமர்சனங்களாக மட்டுமே அமைந்தன.



காலிமுகத்திடல் போராட்டம் ஆரம்பிக்கப்பட்ட பின்னர் சிங்கள இளைஞர் மத்தியில் தமிழ் மக்கள் தொடர்பான கருத்துக்களில் மாற்றங்கள் ஏற்பட்டு வருகின்றமையினை உணரக் கூடியதாகவுள்ளது. சிங்கள அரசியல்வாதிகளே இனவாதத்தைத் தூண்டி தமிழ் சிங்கள மக்களை பிரித்து வைத்தனர் என்பதான கருத்துக்கள் சிங்கள இளைஞர், யுவதிகள் மத்தியிலிருந்து வெளிப்படுவதைக் காண முடிகின்றது.

கடந்த மே மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு காலிமுகத்திடலில் நடத்தப்பட்டது. காலி முகத்திடலில் அமைக்கப்பட்ட ‘கோட்டா கோ கம’ களத்திலேயே முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வு கடைப்பிடிக்கப்பட்டது. யுத்தத்தில் உயிரிழந்தவர்கள், யுத்தத்தின் போது காணமலாக்கப்பட்டோர், கைது செய்யப்பட்டவர்கள் உள்ளிட்டவர்களை நினைவுகூரும் முகமாக இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நினைவேந்தல் உரைகள் தமிழிலும் சிங்கள மொழியிலும் நிகழ்த்தப்பட்டன. முள்ளிவாய்க்கால் நினைவாகக் கஞ்சியும்



காய்ச்சப்பட்டு பரிமாறப்பட்டது. வரலாற்றில் முதன்முறையாக கொழும்பில் இந்த நினைவேந்தல் நிகழ்வு நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

1983ஆம் ஆண்டு ஜூலை 23ஆம் திகதி தமிழ் மக்களுக்கு எதிராகக் கட்டவிழ்த்து விடப்பட்ட இனக் கலவரத்தின் 39ஆவது நினைவுகூரல் நிகழ்வும் கொழும்பு காலி முகத்திடலில் சிங்கள இளைஞர்களால் நடத்தப்பட்டுள்ளது. இதன்போது, தமிழ் மக்கள் தென்னிலங்கையில் படுகொலை செய்யப்பட்டு துன்புறுத்தப்பட்டமை குறித்து சிங்களக் கலைஞர் ஒருவரால் ஆற்றுகை ஒன்றும் நிகழ்த்தப்பட்டது.

சிங்கள இளைஞர் மத்தியில் ஏற்பட்டுள்ள புதிய மாற்றமாகவே இதனைக் கருத வேண்டும். இந்த இளைய சமூகத்தினராலேயே தமிழ் மக்களின் நியாயமான அரசியல் கோரிக்கையினை ஏனைய மூத்த சிங்கள சமூகத்தினருக்கு எடுத்துரைக்க முடியும். இதற்கு தமிழ் இளைஞர்களும், முற்போக்கான சிங்கள இளைஞர்களும் எதிர்காலத்தில் இணைந்து செயற்படும் ஒரு பொறிமுறையை உருவாக்கலாம். இதனை இரு தரப்பு அரசியல்வாதிகளும் விரும்ப மாட்டார்கள். சுயாதீனமாக இரு தரப்பு இளையோரும் இணைந்து இவ்வாறானதொரு பொறிமுறையை ஏற்படுத்த வேண்டும்.

தமிழ் பிரதேசங்களில் இடம்பெறும் போராட்டங்களில் சிங்கள இளைஞர் வந்து கலந்து கொள்வதும், சிங்கள பிரதேசங்களில் நடைபெறும் ஜனநாயக முறையிலான போராட்டங்களில் தமிழ் இளைஞர் சென்று கலந்துகொள்வதும் ஓர் இணைப்பை ஏற்படுத்தும்.

அதேவேளை, தமிழ் மக்கள் கொழும்பில் ஒரு கவனயீர்ப்புப் போராட்டதை நடத்துவதற்கு சிங்கள இளைஞர் வழிசமைக்கும் விதமான உறவு நிலையினையும் ஏற்படுத்தலாம். இது ஒரு புதிய மாற்றத்திற்கு வழிசமைக்கும். விடுதலைப் புலிகளின் காலத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ‘மானுடத்தின் கூடல்’ கொழும்பில் நடைபெற்ற ‘தமிழ் சிங்கள கலைக்கூடல்’ என்பனவற்றை உதாரணமாகக் கொள்ள முடியும். முயற்சித்துப் பார்ப்பதில் தவறில்லை.

விளம்பரம் VLAMBARAM
32ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: பிரசாந்தி அருள்தாசன்
பதிப்பு: Canyon Press Inc.
‘விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்’ நிறுவனத்தால் வெளியிடப்படும் ‘விளம்பரம்’ பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும், விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.
Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com
Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

# MORTGAGE & LINE OF CREDIT

- ⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் ( OAC*)
- ⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC - No Income Required*)
- ⇒ **Private Mortgage** (No Income Verification)
- ⇒ ரீபைனான்ஸ்,Title Transfer, ரினிவல்
- ⇒ 2வது, 3வது மோட்கேஜ் (Funded within 48hrs)
- ⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கான மோர்ட்கேஜ்
- ⇒ எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க
- ⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல்**
**வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

MORTGAGE CLINIC



ஜெ(Jey)இராசதுரை
MBA. BBA (Hon) AMP

Team Leader / Mortgage & Real Estate Broker

**Cell : 416-624- 4843**



www.mortgageclinic canada.com
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Brokerage: 1396 Don Mills Rd, Unit B121Toronto ON M3B 0A7 Corp office : 200-2005 Sheppard Ave E, Toronto ON M2J 5B4

# NOTARY PUBLIC & LEGAL SERVICES

**Notarizations, Certifications & Commissioning**

* Affidavits
* Certification of True Copy
* Preparation and Notarize the Letter of Invitation
* Commissioning Statutory Declarations and Solemn Affirmations
* Power Of Attorney & Will

* Small Claims
* Landlord & Tenant Matters
* Business Registration & Renewal

AAA Legal Services
AAA LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION

**Call:(416) 814 -7450**
(Markham Rd & HWY 401 - Scarborough)

** Promotional Rate for students
$20per sign

## நாமும் நமது இல்லமும் 612

# ரொறொன்ரோ ஆதனம் கனவாகின்றதா?



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

இவ்வருட ஆரம்பத்திலிருந்து தொடர்ச்சியான நான்கு தடவைகள் வங்கியின் வட்டிவீதம் அதிகரிக்கப்பட்டு 2.5%ஆகக் காணப்படுகின்றது. இதனால் பெரும்பாலான நிதி நிறுவனங்களின் முதன்மை வட்டி வீதம் 4.7%ஆக உள்ளது.

வட்டி வீத அதிகரிப்பு ஆதன விலையை கீழ்நோக்கித் தள்ளுவதனைக் காணலாம். அத்துடன் அடமானக் கடன் பெற்று ஆதனம் வாங்குவதிலும் மிகவும் இறுக்கமாக உள்ளது. கடந்த வருடத்துடன் (2021) ஒப்பிடும்போது, அடமானக் கடன் பெறுவதற்கு அதிகளவு வருடாந்த வருமானம் தேவைப்படுகின்றது. குறிப்பாக கடந்த நான்கு மாதங்களில் இந்நிலைமை மிகவும் இறுக்கமாகக் காணப்படுகின்றது. இதே நிலைமை கனடாவின் மேற்கு நகரமாகிய வன்கூவரிலும் காணப்படுகின்றது.

கனடியர்கள் அடமானக் கடன் பெற்று ஆதனம் வாங்குவதற்கு ஆதன விலை மேலும் இறங்கவேண்டியுள்ளது. ஆனால் கனடிய மத்திய வங்கியின் ஆளுனர் மேலும் வட்டிவீதம் தொடர்ந்து அதிகரிக்கப் போவதாகக் கூறுகின்றார். இவ்வாறான வார்த்தைப் பிரயோகத்தால் ஆதன முதலீட்டாளர்கள், முதல் தடவை வாங்க இருப்போர் ஆதனக் கொள்வனவிலிருந்து விலகியே உள்ளனர். இவர்கள் ஆதன விலை மேலும் குறையும் என எதிர்பார்க்கின்றனர். இவர்களின் நிலைப்பாடு நியாயமாகவே தோன்றுகின்றது. இதனையே புள்ளிவிபரங்கள் காட்டுகின்றன.

யூன் 2022ஆம் ஆண்டில் ஏற்பட்ட மாதாந்த ஆதன விலை இறக்கம் 2005 ஆம் ஆண்டிற்கு பிற்பாட்டில், அதிகூடிய இறக்கமாகும். பொதுவாக பெரிய அளவிலான வட்டிவீதம் அதிகரிப்பு ஏற்பட்டால் அதன் பாதிப்பு ஒரு வருடத்திற்குப் பின்பே தெரியவரும். யூலை, 13, 2022இல் ஏற்படுத்திய 1% என்ற பெரிய அதிகரிப்பின் பாதிப்பு நிச்சயம் 2023இல் தெரியவரும். இதனால் அடுத்த வருடத்தின் முற்பகுதிவரை ஆதன விலை, வியாபார இறக்கத்தை எதிர்பார்க்கலாம்.

பொதுவாக ஆதன வியாபாரம் மந்த நிலையிலே காணப்படுகின்றது. எனினும்



சில பகுதிகளிலும் அதிக விலை கொடுத்து வாங்குவதனையும் காணலாம். புதிதாக நிர்மாணம் செய்யும் ஆதனத்தில் முதலிடுபவர்களையும் காணலாம்.

இன்றிலிருந்து நான்கு _ ஐந்து வருடங்கள்வரை ஆதனக் கடன் பெற வேண்டிய கடப்பாடு இல்லாததால், புதிய மனையை வாங்குவோரும் உள்ளனர். எனினும் விற்பதற்காக, ஏற்கனவே கட்டி முடிக்கப்பட்டு மக்கள் வாழும் (Resale) அடுக்குமனை வியாபாரம் முற்றிலும் வேறாகக் காணப்படுகின்றது.

சந்தைப்படுத்தப்படும் அடுக்குமாடி மனைகள் எதிர்பாராத அளவிற்கு மிகவும் மந்த நிலையில் வியாபாரம் காணப்படு கின்றது. ரொறொன்ரோவில் அடுக்குமாடி மனைகளின் விலை மார்ச் 2022உடன் ஒப்பிடும்போது 6-8% வரை இறங்கியுள்ள தனைக் காணலாம். மார்ச் 2022இற்கு முன்பாக ஒரு கிழமைக்கு முன்பாக விற்கப்பட்ட மனைகள் இன்று 60 நாட்களைக் கடந்தும் விற்கப்படாமல் உள்ளன. இதனால் பல வீட்டு/மனை உரிமையாளர்கள் விலையை குறைப்பதனைக் காணலாம்.

அத்துடன் ரொறொன்ரோ பெரும்பாகத்தில் அடுக்குமாடி மனைகளின் வியாபாரம் யூன் 2021உடன் ஒப்பிடும்போது 40% இறங்கியுள்ளது. இதனால் விற்கப்படாமல், அதிக அடுக்குமனைகள் சந்தையில் வாங்குவோரிற்காகக் காத்திருப்பதனைக் காணலாம்.

அடுத்த இதழில் 2022 யூலை வியாபாரத்தைப் பற்றி ஆராய்வோம்.




## குழப்பங்களை...

07 ஆம் பக்கத் தொடர்ச்சி

மணிவரை கால அவகாசம் கேட்கப்பட்டதாகவும், அவ்வாறு தொடர்ச்சியாகக் கால அவகாசம் வழங்க முடியாத சூழலில் நாட்டின் சட்டத்திற்கு உட்பட்டு பொலிஸார் மற்றும் பாதுகாப்பு படைகளை ஈடுபடுத்தி எதிர்ப்பாளர்களை அகற்ற நடவடிக்கை எடுத்ததாகவும் அவர் தெரிவித்தார். எவ்வாறெனினும், நாட்டு மக்களுக்குத் தற்போது ரணில் விக்ரமசிங்க மீதுள்ள கோபம் அதிகரித்துள்ளது. ரணில் பதவி விலக வேண்டும் என்கின்ற கோரிக்கையை முன்வைத்து போராட்டங்கள் ஆரம்பமாகியுள்ளன.

ஒகஸ்ட் மாதம் 9ஆம் திகதி ரணில் விக்ரமசிங்கவை வீட்டுக்கு அனுப்பவுள்ளதாகவும், ராஜபக்ஸக்களைப் போலவே ரணிலையும் மக்கள் துரத்துவர் என்றும் ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

தொடர்ந்தும் போராட்டங்களும், குழப்பங்களும் நாட்டில் நிலவுமானால் தற்போதைய பொருளாதார நெருக்கடியிலிருந்து மக்களைக் காப்பாற்ற முடியாத நிலையே ஏற்படும். இதற்கு தற்போதுள்ள வழி தேர்தல் ஒன்றை நடத்தி மக்கள் தங்களுக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்யும் வாய்ப்பினை ஏற்படுத்துவதேயாகும்.

தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான நிதி இல்லை என்று அரசாங்கம் கூறினாலும் அதற்கான வழி இருக்கிறதென்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் மஹிந்த தேசப்பிரிய தெரிவிக்கின்றார்.



கடந்த ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத் தேர்தலிலும் மக்கள் வழங்கிய ஆணை தற்போது இரத்துச் செய்யப்பட்டுள்ளதால் விரைவில் பொதுத் தேர்தலை நடத்தி, புதிய மக்கள் ஆணைக்கு செல்ல வழியமைக்க வேண்டுமெனவும், ஜனநாயகத்தை நிலைநாட்டும் நோக்கில் தேர்தல் நடத்தப்பட்டால் அதற்கான செலவை ஏற்க நிறுவனங்கள் இருப்பதாகவும் அதற்கு ஆப்கானிஸ்தான், பங்களாதேஸ் போன்ற நாடுகளை உதாரணமாக சுட்டிக்காட்ட முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு கொடுப்பனவும் பெறாமல் தேர்தல் கடமைகளில் ஈடுபடத் தயார் என அரச அதிகாரிகள் ஏற்கனவே அறிவித்துள்ளதால், பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் தேர்தலை நடத்துவது பெரிய பிரச்சினையாக இருக்காது என மஹிந்த தேசப்பிரிய கூறுகின்றார்.
எனவே, நாட்டில் தற்போது நிலவும் குழப்பங்களை தவிர்க்க வேண்டுமானால், தேர்தல் ஒன்றை நடத்துவதுதான் நல்லதொரு வழிமுறை.

# குழப்பங்களைத் தவிர்க்க தேர்தல் ஒன்றே வழி!

- விகிர்தன் -

ரணில் விக்ரமசிங்க இலங்கையின் ஜனாதிபதியாகப் பதவியேற்ற உடனேயே ஜனநாயக மீறல் நடவடிக்கையொன்றை மேற்கொண்டமை பலரையும் அதிர்ச்சிக்கு உள்ளாக்கியது.

நாட்டில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப் பட்டு வந்த மக்களின் ஜனநாயக ரீதியிலான போராட்டம் ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஸவை நாட்டை விட்டு தப்பியோடும் நிலையை ஏற்படுத்தியிருக்கின்றதென்றால் அந்தப் போராட்டம் மிக வலிமையானது என்பதில் சந்தேகமில்லை.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ரணில் விக்ரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய கட்சி ஓர் ஆசனத்தைக் கூடப் பெற முடியாத நிலையில் படுதோல்வியடைந்தது. கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க போட்டியிட்ட அவரது தொகுதியிலேயே வெற்றிபெற முடியாமல் போனது. ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைமையும், ரணில் விக்ரமசிங்கவின் அரசியல் எதிர்காலமும் எவ்வாறு அமையப் போகின்றது என கணிப்பிட முடியாமலிருந்த சூழ்நிலையில், யாரும் எதிர்பார்த்திராத- ரணில் விக்ரமசிங்கவே எதிர்பார்த்திராத சம்பவங்கள் நடந்தேறின. மஹிந்த ராஜபக்ஸ பிரதமர் பதவியில் இருந்து விலக வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதும், அந்தப் பதவியை பிரதான எதிர்க்கட்சியின் தலைவரான சஜித் பிரேமதாஸவோ, வேறு எவருமோ ஏற்றுக் கொள்ளாததன் காரணத்தினால் ரணில் விக்ரமசிங்க களத்திற்கு வந்தார். எவ்வித பேரம் பேசுதலுமின்றி அவர் பிரதமர் பதவியை ஏற்றுக்கொண்டார். நாட்டை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பதற்காகவே தான் பிரதமர் பதிவியை ஏற்றுக்கொண்டதாக அவர் தெரிவித்தார்.

தொடர்ந்து, மக்கள் போராட்டம் தீவிரம் அடைந்தபோது நாட்டின் ஜனாதிபதியாக இருந்த கோட்டாபய ராஜபக்ஸ நாட்டை விட்டுத் தப்பியோடும் நிலை ஏற்பட்டது. வெளிநாடு ஒன்றில் இருந்தவாறே அவர் ரணில் விக்ரமசிங்கவை பதில் ஜனாதிபதியாக அறிவித்தார். கோட்டாபய ராஜபக்ஸ ஜனாதிபதி பதவியிலிருந்து விலகியதன் பின்னர், நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையாக இருக்கும் பொதுஜன பெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்களின் வாக்குகளினால் ரணில் ஜனாதிபதியானார்.

இலங்கை வரலாற்றில் நாடாளுமன்றத்தின் மூலமாக ஒருவர் ஜனாதிபதியாக தெரிவானது இதுவே முதற் தடவையாகும். இப்போது ரணில் விக்ரமசிங்க இலங்கையின் 8ஆவது நிறைவேற்றதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகி இருக்கின்றார். இலங்கையில் முன்னெடுக்கப்பட்ட மாபெரும் மக்கள் போராட்டமே இதற்கெல்லாம் காரணம் என்பதை எவரும் மறுதலிக்க முடியாது.



எவ்வாறாயினும், ரணில் விக்ரமசிங்க சர்வதேச நாடுகளின் செல்வாக்கைப் பெற்றவர் என்றும், இதனால், இலங்கையின் பொருளாதார நெருக்கடியினால் மக்கள் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளுக்கு அவரால் படிப்படியாகவேனும் தீர்வினை பெற்றுத்தர முடியும் என்றும் ஓர் எதிர்பார்ப்பு பொதுமக்கள் மத்தியில் ஏற்பட்டது. ஆனால், அவர் ஜனாதிபதியாகப் பதவியேற்ற உடனேயே மேற்கொண்ட அதிரடி நடவடிக்கை எதிர்பார்ப்புக்களை தலைகீழாக்கியது.

நிறைவேற்று அதிகாரத்தைக் கொண்ட ஜனாதிபதியாகக் குறுக்கு வழியில் வந்த ரணில் விக்ரமசிங்கவின் உத்தரவின் பேரில் பழைய நாடாளுமன்ற வளாகத்திற்குள் திடீரென ஆயுதங்களுடன் உள்நுழைந்த பொலிஸாரும், இராணுவத்தினரும், ஜனாதிபதி வளாகத்தில் தங்கியிருந்த போராட்டக்காரர்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொண்டனர். யாருமே எதிர்பார்க்காத நேரத்தில், யூலை 22ஆம் திகதி நள்ளிரவு வேளையில் படையினரால் ஆரம்பிக்கப்பட்ட அதிரடித் தாக்குதலில் அப்பகுதி யுத்தகளம் போன்று மாறியது. சம்பவத்தை கேள்வியுற்று, குறித்த இடத்திற்கு விரைந்த உள்நாட்டு, வெளிநாட்டு ஊடகவியலாளர்கள் மீதும் சரமாரியான தாக்குதல்களை படையினர் மேற்கொண்டனர். ஊடகவியலாளர் சிலரின் கமெராக்களை உடைக்கவும் படையினர் முயற்சித்தனர்.

பெண்கள் உள்ளிட்ட போராட்டக்காரர்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களை படையினர் மேற்கொண்டனர். இதனால் போராட்டக்காரர்களுக்குக் காயங்களையும் ஏற்படுத்தினர். பலர் கைதுசெய்யப்பட்டு அழைத்துச் செல்லப்பட்டனர்.

போராட்டம் நடத்திய அந்த இடத்தை விட்டு 22ஆம் திகதி நண்பகலுடன் அகன்று சென்றுவிடுவதாக, முதல் நாள் 21ஆம் திகதியன்றே கோட்டை பொலிஸாருக்கு எழுத்து மூலமாக உறுதியளித்த போராட்டக்காரர்கள், அதற்கான கடிதத்தையும் கையளித்திருந்தனர். எனினும், நடுநிசியில் உள்நுழைந்த படையினர் போராட்டக்காரர்கள்மீது கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொண்டனர். இத்தாக்குதல்களை எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் கண்டித்துள்ளதுடன், உள்நாட்டிலுள்ள சிவில் அமைப்புக்களும் கண்டித்துள்ளன. அதனையும்விட சர்வதேச நாடுகளும், அமைப்புக்களும் வன்மையாகக் கண்டித்துள்ளன.

அமெரிக்கா இத்தாக்குதல் சம்பவத்தை உடனடியாகவே கண்டித்தது. நள்ளிரவில் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து ஆழ்ந்த கவலை அடைவதாக இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங் சம்பவம் நடைபெற்றவுடனேயே அவரது ட்விட்டரில் பதிவிட்டிருந்தார். இலங்கை அதிகாரிகள் கட்டுப்பாட்டுடன் இருக்குமாறும் அவர் கேட்டுக்கொண்டார். அது மட்டுமன்றி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை நேரிலும் சந்தித்துத் தனது கவலையை தெரிவித்திருந்தார்.

சிறந்த எதிர்காலத்திற்கான இலங்கை மக்களின் அழைப்புகளுக்குப் பதிலளிக்க, ஜனாதிபதி மற்றும் அமைச்சரவைக்கு ஒரு வாய்ப்பும் கடமையும் உள்ளது. குடிமக்களை ஒடுக்குவதற்கான நேரம் இதுவல்ல எனவும் அமெரிக்கத் தூதுவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

அமைதியான போராட்டக்காரர்கள் மீது அவசியமற்ற அதிகாரத்தை பயன்படுத்தியதாக ஐரோப்பிய ஒன்றியம் கண்டித்துள்ளதுடன் அமைதியான ஒன்றுகூடலுக்கான உரிமையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தியுள்ளது.

புதிய ஜனாதிபதியாக ரணில் விக்மசிங்கவை நியமிக்க இலங்கை நாடாளுமன்றம் துரித நடவடிக்கை எடுத்ததைப் போல், இலங்கை மக்களின் கருத்துச் சுதந்திரத்தையும், தனிப்பட்ட உரிமைகளை ஜனநாயக ரீதியிலும் அமைதியான முறையிலும் நிலைநாட்ட வேண்டியதன் அவசியத்தையும் ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்தியுள்ளது. மேலும், இலங்கையின் புதிய அரசாங்கம் அதன் ஜீஎஸ்பி பிளஸ் உறுதி மொழிகளுக்கு முழுமையாக இணங்கி செயற்படும் என எதிர்பார்ப்பதாகவும் கடுமையான தொனியில் சுட்டிக்காட்டியுள்ளது.

போராட்டக்காரர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் சட்டத்தரணிகள்மீது தாக்குதல் நடத்தப்பட்டமை தொடர்பில் ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் அலுவலகமும் கண்டித்துள்ளது.


அமைதியான போராட்டக்காரர்களுக்கு எதிராகப் பலாத்காரத்தைப் பயன்படுத்துவது சர்வதேச சட்டத்திற்கு முரணானது எனவும், அவ்வாறான பலத்தைப் பயன்படுத்துவதை உடனடியாக நிறுத்த வேண்டும் எனவும் மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகம் கோரியுள்ளது. இவ்வாறு சர்வதேச நாடுகள், சர்வதேச அமைப்புக்கள் தங்கள் கவலைகளையும் கண்டனங்களையும் தெரிவித்து வருகின்றன. எனினும், ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது பக்க நியாயங்களை வெளிப்படுத்தி வருகின்றார்.

அமெரிக்கா, கனடா, பிரித்தானியா, பிரான்ஸ், ஜப்பான் மற்றும் அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளின் உயர்ஸ்தானிகர்கள், தூதுவர்கள் மற்றும் இலங்கையில் உள்ள ஐரோப்பிய ஒன்றிய அலுவலகத்தின் பிரதிநிதிகளுடனான சந்திப்பில் ரணில் தான் செய்தது சரியானதே என விளக்கமளித்துள்ளார்.

அமெரிக்க கேபிடல் கட்டடத்தை எதிர்ப்பாளர்களிடமிருந்து விடுவிக்க அந்நாட்டின் பாதுகாப்புப் படைகள் அமெரிக்க சட்டத்தின்படி இவ்வாறுதான் செயற்பட்டதாக அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்கிடம் அவர் சுட்டிக்காட்டியிருந்தார்.

ஜனாதிபதி செயலகம் நாட்டின் பிரதான நிர்வாக கட்டடம் எனவும், பல முக்கிய ஆவணங்கள் ஜனாதிபதி செயலகத்தில் வைக்கப்பட்டுள்ளதாகவும் அதனை மீட்டெடுப்பது கட்டாயமானதெனவும் ஜனாதிபதி ரணில் அவர்களிடம் விளக்கினார். அத்துடன், 14, 16, 21ஆம் திகதிகளில் போராட்டக்காரர்களை ஜனாதிபதி செயலகத்தை விட்டு வெளியேறுமாறு முன்னறிவிப்பு வழங்கப்பட்ட போதிலும், அதிகாலை 6 மணிக்கு ஆர்ப்பாட்டக்காரர்கள் அந்த வளாகத்தை விட்டு வெளியேற மறுத்த நிலையில் பிற்பகல் 2

(தொடர்ச்சி 06ஆம் பக்கம்...)

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!
• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514

OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# நானிலம் போற்றும் நட்பு - 4



- அகணி -
authorakani@gmail.com

திருவள்ளுவர் குறள் 784இல் நல்லோர் நட்பு இன்பம் தரக்கூடியது என்று
“நகுதல் பொருட்டுஅன்று நவிட்டல் - மிகுதிக்கண்
மேற்சென்று இடித்தல் பொருட்டு
இந்தக் குறளுக்கு “நட்பு என்பது சிரித்து விளையாடுவதற்காக அன்று. நண்பர் செய்தல் தீமை செய்யும்போது கண்டித்துப் புத்தி புகட்டுவதற்காகத்தான்” என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார். இந்தக் குறளுக்கு “நட்பு என்பது சிரித்து விளையாடுவதற்காக அன்று. நண்பர் யாரேனும் தவறு செய்தால் கண்டித்துத் திருத்துவதற்காகத்தான்” என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு. மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார். “நட்புச் செய்தல் ஒருவரோடு ஒருவர் சிரித்து மகிழும் பொருட்டு அன்று, நண்பர் நெறிகடந்து செல்லும்போது முற்பட்டுச் சென்று இடித்துரைப்பதற்காகும்.” என்று உரை தந்துள்ளார் மு.வரதராசனார்.

நல்ல நண்பர்கள் நெருக்கமாகப் பழகும் காரணத்தால் தனது நண்பனுக்கு அரணாகவிருந்து பாதுகாக்கும் தன்மை கொண்டவன். தனது நண்பன் எடுக்கும் முடிவுகள் பிழையாகவிருந்தால் அதை எடுத்துக் கூறி நல்வழிப்படுத்துவான். தீமை செய்யும்பொழுது நண்பன் பொறுமையாக அதனால் வரும் ஆபத்துகளை நண்பனுக்கு எடுத்துக் கூறி நல்வழிப்படுத்தல் வேண்டும். ஆனாலும் ஒருவரின் தவறுகளைப் பலர் முன்னிலையில் கூறிக்கொள்வது முறையற்ற செயல் என்பதையும், ஒருவரின் நேர்மறையான விடயங்களைக் கூறிப் பாராட்டிக்கொள்வது மிகவும் முக்கியமானது என்பதையும் இந்த நேரத்தில் நினைவில் கொள்ளுவோம். ஆனால் ஆரோக்கியமான முறையில் தீயதைக் கண்டித்துத் திருத்துதல் மற்ற எல்லா உறவுகளையும்விட நண்பர்களுக்கு இலகுவானதாக இருக்கும். இந்தக் குறளில் நண்பர் என்றால் சேர்ந்து சிரித்து மகிழ்வதற்கப்பால் நிறைந்தளவு பொறுப்பு உள்ளது என்பதையும் சுட்டி நிற்கிறது. நல்ல நண்பர்கள் சூழவிருந்தால் ஒருவனின் எண்ணங்களும், செயல்களும் நன்றாகவிருக்கும் என்பதும் பொதுவான கருத்து.

நிகோமாசியன் நெறிமுறைகளில், அரிஸ்ரோட்டில் நட்பை பரஸ்பர நல்லெண்ணம் என்று விவரிக்கிறார். ஆனால் அந்த நல்லெண்ணத்தின் ஆதாரமே சரியான நட்பை இரண்டு பூரணமற்ற நட்பில் இருந்து வேறுபடுத்துகிறது. உண்மையான நட்புடன், நண்பர்கள் தங்கள் சொந்த நலனுக்காக ஒருவரையொருவர் நேசிக்கின்றனர், அவர்கள் ஒருவருக்கொருவர் நல்லதை விரும்புகின்றனர்.

தத்துவஞானி அரிஸ்ரோட்டில் மூன்று வகையான நட்பைக் கண்டறிந்தார்: ஒன்று பயன்பாடு அல்லது இன்பம் மற்றும் ஒன்று மற்றவரின் மதிப்புகளை பரஸ்பரம் பாராட்டுதல்.




முதல் இரண்டும் தற்செயலான நட்புகள் ஆகும். இவை நட்பின் ஆழத்தில் வரையறுக்கப்பட்டவை. இவை நீண்ட காலம் நீடிக்காத தன்மை கொண்டவை. ஆனால் நல்லொழுக்கங்களை அடிப்படையாகக் கொண்ட நட்பு வலுவான தொடர்புகளை உருவாக்குகிறது. இத்தகைய நட்பே அதிக காலத்திற்கு நீடிக்கும் தன்மை கொண்டது. அரிஸ்ரோட்டிலின் சில கோட்பாடுகள் நிராகரிக்கப்படுவது வழக்கமானாலும் நல்ல நட்பு ஒரு நல்ல வாழ்க்கைக்கு இன்றியமையாதது என்ற கருத்து மிகவும் பொருத்தமானதாகவுள்ளது.

சிறந்த நட்புகள் குணநலன்களின் மதிப்பீட்டின் அடிப்படையில் இருக்க வேண்டும். பரிவர்த்தனை மதிப்பின் அடிப்படையில் இருக்கக் கூடாது. நட்பானது நம் வாழ்க்கையை மென்மேலும் சிறப்பாக வடிவமைக்கும் தன்மை கொண்டதாக இருக்க வேண்டும்.

அரிஸ்ரோட்டிலின் தாக்கம் இன்றும் பல்வேறு பாடங்களில் உணரப்பட்டாலும், அவரது அவதானிப்புகளில் மிகவும் துல்லியமானது நட்புடன் தொடர்புடையதாக இருந்தது. அவர் அதை வாழ்க்கையின் உண்மையான மகிழ்ச்சிகளில் ஒன்றாகக் கண்டார், மேலும் அத்தகைய தோழமையைச் சுற்றி ஒரு நல்ல வாழ்க்கை கட்டப்பட வேண்டும் என்று அவர் உணர்ந்தார். அவரது சொந்த வார்த்தைகளில் “வறுமையிலும் மற்ற துன்பங்களிலும், நண்பர்கள் மட்டுமே தங்களின் புகலிடம் என்று மக்கள் நினைக்கின்றனர், மேலும் இளைஞர்களுக்கு நட்பு ஓர் உதவியாக இருக்கிறது, அவர்களை பிழையிலிருந்து காப்பாற்றுகிறது, அதுபோலவே, வயதானவர்களுக்கும், அவர்களின் கவனிப்பைக் கருத்தில் கொண்டு. தேவை மற்றும் அவர்களின் பலவீனத்தால் உருவாகும் செயலுக்கான அவர்களின் திறன் குறைகிறது. உன்னதமான செயல்களைச் செய்வதில் முதன்மையானவர்களுக்கு இது ஒரு உதவியாகும், ஏனென்றால் “இருவரும் ஒன்றாகச் செல்வது, சிறப்பாகச் சிந்திக்கவும் செயல்படவும் முடியும்.” இவ்வாறு குறிப்பிடுகின்றார்.

அரிஸ்ரோட்டில் இரண்டு வகையான பொதுவான நட்பைக் கோடிட்டுக் காட்டினார். அவை வேண்டுமென்றே இருப்பதைவிடத் தற்செயலானவை என்று கருதினார்.

முதலாவது பயன்பாட்டு நட்பு. இந்த வகையான உறவில், இரு தரப்பினரும் ஒருவருக்கொருவர் பாசத்திற்காக இல்லை மாறாக ஒவ்வொரு தரப்பினரும் ஈடாக ஒரு நன்மையைப் பெறுகின்றனர் (mutual benefits).

இது இயற்கையில் நிரந்தரமானது அல்ல என்கின்றார். அரிஸ்ரோட்டில் வயதானவர்களுக்கு இது மிகவும் பொதுவானதாக இருப்பதைக் கவனித்தார். இதற்கு ஓர் உதாரணம் வணிகம் அல்லது வேலை உறவு. நீங்கள் ஒன்றாக செலவழிக்கும் நேரத்தை நீங்கள் அனுபவிக்கலாம், ஆனால் நிலைமை மாறியவுடன், உங்கள் இணைப்பின் தன்மையும் மாறும்.

அதேபோல், இரண்டாவது வகையான தற்செயலான நட்பு இன்பத்தை அடிப்படையாகக் கொண்டது. இருப்பினும், இது இளையோருக்கு மிகவும் பொதுவானது. கல்லூரி நண்பர்கள் அல்லது ஒரே விளையாட்டுக் குழுவில் பங்கேற்கும் நபர்களிடையே அடிக்கடி காணப்படும் உறவு இது. அத்தகைய நட்பின் ஆதாரம் மிகவும் உணர்ச்சிகரமானது, மேலும் இது பெரும்பாலும் குறுகிய கால உறவுகள் ஆகும். வெளியில் ஏதாவது ஒரு பரஸ்பர ஆர்வத்தின் மூலம் இரு தரப்பினரும் மகிழ்ச்சியைப் பெறும்வரை இது நல்லது, ஆனால் சுவைகள் அல்லது விருப்பங்கள் மாறியவுடன் அது முடிவடைகிறது.

பல இளைஞர் இன்பம் பற்றிய தங்கள் பார்வையில் வெவ்வேறு கட்டங்களைக் கடந்து செல்கின்றனர். மேலும் அடிக்கடி, அவர்கள் இருக்கும் கட்டம் காலப் போக்கில் மீண்டும் அளவீடு செய்யப்படுவதால், அவர்களின் வாழ்க்கையில் உள்ளவர்கள் மாறுகின்றனர்.

நம்மில் பலருக்கு இருக்கும் பெரும்பாலான நட்புகள் இந்த இரண்டு வகைகளில் அடங்கும், அரிஸ்ரோட்டில் அவர்களை மோசமாகப் பார்க்கவில்லை என்றாலும், அவற்றின் ஆழம் அவர்களின் தரத்தை மட்டுப்படுத்தியது என்பதை அவர் உணர்ந்தார்.

தற்செயலான நட்பைப் பெறுவதும் நல்லதுவே. இது அவசியமும் ஆகும். அரிஸ்ரோட்டில் கோடிட்டுக் காட்டிய நட்பின் இறுதி வடிவம் ஏனையவற்றைவிட மிகவும் விரும்பத்தக்கது.

பயன் அல்லது மகிழ்ச்சிக்கு பதிலாக, இந்த வகையான உறவு, மற்ற தரப்பினர் விரும்பும் நற்பண்புகளின் பரஸ்பர பாராட்டுதலை அடிப்படையாகக் கொண்டது. மக்களும் அவர்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் குணங்களும்தான் இரு கட்சிகளும் ஒருவருக்கொருவர் வாழ்வில் இருப்பதற்கு ஊக்கமளிக்கின்றன.

குறுகிய காலமாக இருப்பதற்குப் பதிலாக, அத்தகைய உறவு பெரும்பாலும் இறுதி வரை நீடிக்கும், மேலும் அது முதலில் இருப்பதற்கு ஒவ்வொரு நபருக்கும் பொதுவாக ஓர் அடிப்படை அளவிலான நன்மை தேவைப்படுகிறது.

மற்றவர்களிடம் அக்கறை இல்லாதவர்கள் இந்த வகையான உறவுகளை அரிதாகவே வளர்த்துக் கொள்கின்றனர், ஏனெனில், பெரும்பாலும் இன்பம் அல்லது பயன் பாட்டைத் தேடுவதே அவர்களின் விருப்பம். அதற்குமேல், நல்லொழுக்கத்தின் நட்பு கட்டமைக்க நேரத்தையும் நம்பிக்கையையும் எடுக்கும். அவை பரஸ்பர வளர்ச்சியைப் பொறுத்தது.

நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். “நானிலம் போற்றும் நட்பு” என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம். (தொடரும்)


சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

MATH & PHYSICS TUTORING
By a well-qualified and experienced teacher
For all grades from Grade 4 to 1st year of university
Special classes
- Advanced function
- Calculus & vectors
- Data management
All Classes available in Scarborough & Stouffville

Mr.S.F.Xavier (Teacher)
Contact: 647.340.9490 / 416.732.2228

# இலங்கையில்...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

செய்து பதவி ஏற்றனர்.

நிதி மற்றும் பாதுகாப்பு அமைச்சர் _ ரணில் விக்கிரமசிங்கா

## இலங்கை நாடாளுமன்றத்தில் உள்ள 225 உறுப்பினர்களது கட்சிகளது விபரம்

| | |
|---|---|
| சிறீலங்கா பொதுஜன பெரமுன (SLPP) | 145 |
| ஐக்கிய மக்கள் சக்தி (SJB) | 54 |
| இலங்கைத் தமிழ் அரசுக்கட்சி (ITAK) | 10 |
| தேசிய மக்கள் சக்தி (JJB) | 3 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி (EPDP) | 2 |
| அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் (AITC) | 2 |
| தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (TMVP) | 1 |
| சிறீலங்கா சுதந்திரக் கட்சி (SLFP) | 1 |
| முஸ்லீம் தேசியக் கூட்டணி (MNA) | 1 |
| தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி (TMTK) | 1 |
| அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் (ACMC) | 1 |
| தேசிய காங்கிரஸ் (NC) | 1 |
| சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ் (SLMC) | 1 |
| ஐக்கிய தேசியக் கட்சி (UNP) | 1 |
| எங்கள் மக்கள் சக்தி கட்சி (OPPP) | 1 |
| மொத்தம் | 225 |

செய்யக்கூடியவர்கள் எனத் தெரிவித்துள்ளன. தினேஷ் குணவர்த்தனா இலங்கை அரசியலில் இடதுசாரி அரசியலில் பெரும் தலைவராக இருந்த பிலிப் குணவர்த்தனாவினுடைய மகன்.



இலங்கை அதிபர் ரணில் விக்கிரமசிங்காவிற்குக் காலிமுகத்திடலில் போராட்டம் செய்பவர்களிடையே மதிப்பு இல்லாவிட்டாலும் அவர்கள் நிச்சயமாக தினேஷ் குணவர்த்தனாவிற்கு மிகுந்த மரியாதையையும் மதிப்பையும் செலுத்துவர் என்று தெரிவித்துள்ளன. தினேஷ் குணவர்த்தனா சிங்கள மற்றும் தமிழ் தேசியத் தலைவர்களின் நம்பிக்கையைப் பெற்றவர்.

ரணில் விக்கிரசிங்காவும் தினேஷ் குணவர்த்தனாவும் சர்வதேச நாணய நிதியத்துடன் (IMF) பேரம் பேசுவதற்குத் தகுதியானவர்கள். ரணில் விக்கிரமசிங்கா மேற்குல நம்பிக்கையைப் பெற்றவர். அதேநேரம் தொழிற்சங்கவாதியான தினேஷ் குணவர்த்தனா இலங்கைத் தொழிலாளர் மற்றும் சிங்கள, தமிழ் மக்களின் நலனில் அக்கறை உள்ளவர். IMF நிறுவனத்திற்கு மக்களைப் பாதிக்கும் கடும் நிபந்தனைகளைப் போடுவதற்கு தினேஷ் குணவர்த்தனா இடமளிக்க மாட்டார் எனவும் அவ் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பிரதமர் நியமனத்தைத் தொடர்ந்து இலங்கை அதிபர், பிரதமர் உட்பட 18 பேரைக் கொண்ட அமைச்சரவையைத் தெரிவு செய்தார். எல்லோரும் யூலை 22இல் ரணில் விக்கிரமசிங்காவின் முன்னிலையில் சத்தியப் பிரமாணம்

பொது நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் - தினேஷ் குணவர்த்தனா

வெளிவிவகார அமைச்சர் _ Ali Sabry

சுற்றுலா மற்றும் காணி அமைச்சர் _ Harin Fernando

வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் _ Nalin Fernando

மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் _ Kanchana Wijesekera

| யூலை 20ஆம் திகதி நடந்த வாக்கெடுப்பின் முடிவுகள் | |
|---|---|
| ரணில் விக்கிரமசிங்கா | 134 |
| டளஸ் அழகபெரும | 82 |
| அனுரகுமார திஸாநாயக்க | 3 |
| நிராகரிக்கப்பட்ட வாக்குகள் | 4 |
| அளிக்கப்படாத வாக்குகள் | 2 |

ஏனைய அமைச்சர்களுக்கு ரணில் விக்கிரமசிங்கா முன்னர் பிரதமராக இருக்கும்போது அவர்கள் வகித்த அமைச்சுப் பதவிகளே திரும்பவும் வழங்கப்பட்டுள்ளன. சில அமைச்சுப் பதவிகள் சர்வகட்சிகளின் அமைச்சரவை அமைக்கப்படுமாயின் ஏனைய கட்சிகளுக்கு வழங்கப்படுமென அரச அதிகாரிகளை மேற்கோள்காட்டி The Island ஊடகம் யூலை 26இல் செய்தி வெளியிட்டிருந்தது.

கொழும்பில் உள்ள வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கும் ரணில் விக்கிரமசிங்காவிற்கும் யூலை 22இல் நடைபெற்ற சந்திப்பில் அதிபர் அமைதியாக வன்முறையற்ற போராட்டக்காரர்களின் உரிமைகளை நிலைநாட்டுவதற்கான இலங்கை அரசின் உறுதியைத் தெரிவித்திருந்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் சட்டவிரோதமாக அரச கட்டிடங்களை ஆக்கிரமிப்பதற்கும் மற்றும் அரச அலுவலகங்களில் வேலை செய்ய மக்களைப் போகவிடாமல் மறிப்பதற்கும் அனுமதிக்கப்படவில்லை. போராட்டக்காரர்கள் தாராளமாக விகாரமாதேவி பூங்கா, Hyde park மற்றும் Campbel park போன்ற இடங்களில் அரசுக்கு எதிராகப் போராட்டம் செய்யலாம். அதற்கு அவர்களுக்கு முழு உரிமை உண்டு.

அரசு "கோதா கோ கம" ஆர்ப்பாட்ட இடத்தில் உள்ளோரை ஒன்றும் செய்யவில்லை. அது அரச கட்டிடங்களுக்குப் போவோருக்குத் தடையாக இல்லை. ஆனால் சமூக ஊடகங்களில் அரசு "கோதா கோ கம" இடத்தில் உள்ளோரைக் கலைத்ததாகத் தவறான செய்திகள் பரப்பப்படுகின்றன என விளக்கம் அளித்தார்.

யூலை 25இல் CNN ஊடகத்திற்கு அளித்த பேட்டியில் இலங்கை அதிபர் ரணில் விக்கிரமசிங்கா, ராஜபக்ச குடும்பத்திலிருந்து தான் விலகியிருப்பதாகவும், முன்னைய அரசே இலங்கையின் மோசமான நிதிநிலைக்குக் (Bankrupt) காரணம் என்றும் தெரிவித்தார். ராஜபக்ச அரசே தற்போது எங்களை IMFஇற்குச் சென்று பணம் பெற வேண்டிய நிலைக்குக் கொண்டு வந்தது. நான் இலங்கை மக்களுக்கு, அவர்கள் நிதி நெருக்கடியாலும் அத்தியாவசியப் பொருட்கள் இல்லாமலும் எவ்வாறு



Dinesh Gunawardena - Prime Minister

கஷ்டப்படுகின்றனர் என்று எனக்கு நன்கு தெரியும். நாட்டை ஓர் உறுதியான நிலைக்கு மீட்டுவர எனக்கு ஐந்து அல்லது பத்து வருடங்கள் தேவையில்லை. என்னால் அடுத்த ஆண்டு இறுதிக்குள் நாட்டில் ஓர் உறுதியான நிலையை ஏற்படுத்திப் பொருளாதார வளர்ச்சியை ஆரம்பிக்க முடியும் எனக் கூற விரும்புகிறேன். நிச்சயமாக 2024ஆம் ஆண்டு இறுதிக்குள் இலங்கையின் பொருளாதாரம் வளரத் தொடங்கும், என்று தெரிவித்தார்.

## வரசரண சிவமுருகா! 'வைறஸ்'சை ஒழித்திடாயோ? வையத்தோர் தனைக்காக்க வண்ணத்தேர் ஏறிவாராய்!

குன்றுதோறும் குடியிப்போய்! 'கொடுஞ்சூரன் வதைத்தன்று
வென்றுவாகை சூடியசெவ் வேள்முருகன் தேர்விழாவும்
என்றுதானோ வரும் என்று இனிதேகாத் திருந்தவர்கள்
நன்றுவந்தோம் எனநல்லூர் நாடிவந்து கூடிடுவர்!

ஊரோடு ஒற்றுமையாய்க் கொண்டாடும் பக்தர்களைச்
சீரோடு வாழவைக்கும் சேந்தனவன் திருவிழாவில்
தாரோடு பொலிந்திலங்கும் சண்முகன்வேல் அமர்ந்ததிருத்
தேரோடு வலம்வருவோர் தெருவெல்லாம் நிரம்பிடுவர்!

ஆதிரையான் சொரூபநிலைச் சிவமான செவ்வேளே!
அருள்பொழியுஞ் சோதிவைவேல் தேரேறி வருநாளில்
சாதிவேறு பாடின்றிச் சகலரிலுஞ் சிவங்கண்டு
வீதிசுற்றி வினைதீர்க்கும் தேரிழுக்க ஊர்திரளும்!

முருகனுக்கு அரோகராவென் றதிரவெழும் ஒலியலைகள்!
கருதடியர் ஓதிவரும் பண்ணிசையில் திருமுறைகள்!
பெருகிவரும் பக்தியொடு விரவிவரும் காவடிகள்!
திருமுருகன் விழாக்காணப் போதாதே இருவிழிகள்!
கோலமயில் மீதேறிக் கோதையர்கள் அருகிருக்க
வேலதனைக் கரம்பற்றி வெற்றிக்கொடி தூக்கியொளி
காலவருந் திருக்கோலம் கண்டடியர் மெய்சிலிர்ப்ப
ஆலவாயான் திருக்குமரா! அற்புதத்தேர் ஏறிவாராய்!



முப்புரத்தை எரித்திட்ட முக்கண்ணன் சொரூபமானாய்
எப்பொழுதும் கதிநீயே என்றுதினம் உன்பெயரைச்
செப்பிநிற்கும் அடியாரைச் சேவ்வேளே தேரேறித்
தப்பாமற் கரைசேர்க்கத் தயாபராதேர் ஏறிவாராய்!

குரவணிபன் நிருவாகா! குமரகுரு பரவேகா!
கொன்றொழிக்கும் 'கொறோனா'வை வென்றொழிக்கத் தாமதமேன்?
வரசரண சிவமுருகா! 'வைறஸ்'சை ஒழித்திடாயோ?
வையத்தோர் தனைக்காக்க வண்ணத்தேர் ஏறிவாராய்!

தேர்வடத்தை இனிதிழுக்கத் திருவீதி வலஞ்செய்வாய்!
ஊர்நடப்பி லுருக்குலைந்த ஒற்றுமையின் சீர்கேட்டை
யாரிடத்து முறையிடுவோம்? நல்லைநகர்த் திருக்குமரா!
கார்நிறத்து மாலமருகா! கடிதுவந்து காவாயோ?

காதலொடு உனையேத்திக் கண்பனிப்பத் தொழுவோரைச்
சோதனைசெய் யாதினிநற் சுகமருளிக் காப்பாயோ?
பேதலிக்கும் அடியவரைப் பெரிதுவந்து ஆட்கொண்டு
பாதமலர் ஒளிகாட்டிப் பரமுத்தி அளிப்பாயோ?



'சிவஞானச் சுடர்' கலாநிதி பாரதி இளமுருகனார்





# நினைவேந்தல் - வெங்கடேஷ் சக்ரவர்த்தி

**கண்ணன்**

தமிழ்நாட்டில் தீவிர சினிமா, தீவிர இலக்கிய வட்டாரத்தில் சக்ஸ் என நண்பர்களால் அழைக்கப்பட்ட வெங்கடேஷ் சக்கரவர்த்தி காலமாகி விட்டார். கலை, இலக்கியம், தத்துவம், உளவியல், கலாசார அரசியல் ஆகிய தளங்களில் ஆழ்ந்த அறிவும் தீர்க்கமான பார்வைகளும் கொண்டவர். எழுத்தாளர், தமிழ் திரைப்படத் திறனாய்வாளர், இயக்குநர் மட்டுமின்றி சினிமாவை கற்பித்த பேராசியரும்கூட. சென்னை அரசு திரைப்படக் கல்லூரியில் சிலகாலம் ஆசிரியராக இருந்தார். கடைசி 15 ஆண்டுகள் சென்னை எல்.வி. பிரசாத் திரைப்படக் கல்லூரி, சிவாஜி கணேசன் திரைப்படக் கல்லூரி, ஹைதராபாத் ராமா நாயுடு திரைப்படக் கல்லூரி ஆகியவற்றில் தலைமைப் பொறுப்பில் இருந்தார். மேலும், இந்தியா முழுவதும் பல்வேறு கல்லூரிகளில் மணவர்களுக்கு சினிமாப் பட்டறைகள் நடத்தியுள்ளார்.

